# அகத்தியரும் கிறிஸ்தவமும்

குரு:

குரு என்ற சொல்லுக்கு கு-பாவம், ரு-ருத்ரம், மீட்பது. மனுக்குலத்தின் பாவத்தை மீட்க வல்லவர் இருக்கிறாரா என்ற வினா பண்டைய ரிஷிகளிடையே இருந்தது. குறிப்பாக ரிஷிகளான, சிவவாக்கியர், கொங்கணவர், பாம்பாட்டிச் சித்தர், பட்டினத்தார், தாயுமானவர் குருவைப் பற்றிப் பாடல்கள் பாடி, தங்கள் ஐயத்தை நீக்கும்படியாக மகரிஷி அகத்தியரிடம் முறையிட்டார்கள். அகத்தியரும் அவர்கள் சமர்ப்பித்த பாடல்களை ஆய்ந்து ஆராய்ந்து பாவத்தை நீக்கும் உன்னதமானவரைப் பற்றி முப்பது பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

குருவாகிய கடவுளை **சிவஞான சித்தியார்** இவ்வாறாக விவரிக்கிறார்: இதோ அவரின் பாடல்,

"சூரிய காந்தக் கல்லிடத்தே செய்ய
சுடர் தோன்றிச் ஜோதி தோன்றுமாப்போல்
ஆரியனாம் ஆசான் வந்தருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்"

இதன் பொருள் ஜோதியாக தோன்றி குருவாக வந்து மனிதரில் ஆத்ம ஞானம் உண்டாக நம்மிடம் அவதரித்துள்ளார்.

தாயுமானவர் பாடியுள்ள பாடல்.

"ஏதும் தெரியாதெனை மறைத்த வல்லிருனை
நாதன் நீ நீக்க ஒரு ஞான விளக்கில்லையோ
அல்லும் பகலும் அண்ட வடிவே உனை நான்
புல்லும்படி எனக்கோர் போதனை தான் இல்லையோ
பந்தமெல்லாம் தீரப் பரஞ்ஜோதி நீ குருவாய்
வந்த வடிவை யான் மறவேன் பராபரமே"

இந்தப் பாடலில் வல்லிருள், ஞானவிளக்கு, போதனை, பரஞ்ஜோதி, குரு, தூய நிலை, ஆகிய வார்த்தைகளுக்குப் பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள விளக்கம் தெளிவுபடுத்துகிறது.

ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 9ம் அதிகாரம் 2ம் வசனத்தில் "இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின் மேல் வெளிச்சம் பிரகாசித்தது" மேலும் 8ம் வசனத்தில் "ஆண்டவர் யாக்கோபுக்கு ஒரு வார்த்தையை அனுப்பினார்" என்று வாசிக்கின்றோம். பரிசுத்த மத்தேயு 23ம் அதிகாரம் 8ம் வசனத்தில் "நீங்கள் ரபீ என்றழைக்கப்படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார்..... 10ம் வசனத்தில் "நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள், கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்". லேவியராகமம் 19ம் அதிகாரம் 2ம் வசனத்தில் "உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்."

மேலும் தாயுமானவர் பாடுகிறார்.

"ஞான நெறிக் கேற்ற குரு நண்ணரிய சித்திமுத்தி
தானந்தருமந் தழைத்தகுரு
மானமொடு தாயெனவும் வந்தென்னைத் தந்த குரு
என் சிந்தை கோயிலென வாழுங்குரு"

இந்தப் பாடல்கள் கடவுளை ஜோதிமூர்த்தியும் ஞானமூர்த்தியுமாக குரு அவதாரமாக வந்து மனுக்குலத்தின் பாவங்களை நீக்க வந்துள்ளார் என்று விளக்குகின்றன.

இதே கருத்தை வலியுறுத்திப் **பாம்பாட்டிச் சித்தரும்** பாடியுள்ள இரண்டு பாடல்களைத் தொடர்ந்து படிப்போம்.

"காயம் நிலை அழியைக் கண்டு கொண்டு பின்
கற்பு நிலை யுள்ளிந் கொண்டு எக்காலமும் வாழும்
தூய நிலைகொண்ட பரிசுத்த குரு வின்
துணையடி தொழுது நின்று ஆடு பாம்பே"

"அருவாயும் உருவாயும் அந்தியாயும்
அந்தமாயும் ஒளியாயும் ஆகமமாயும்
திருவாயும் குருவாயும் சீவனாயும்
செறிந்த வஸ்துவைப் போற்றியாடுபாம்பே"

இப்பாடல்களின் பொருள் அருபியாகவும், சொருபியாகவும், காலையாகவும், மாலையாகவும், ஜோதியாகவும், போதகனாகவும், ஜீவனுள்ள தேவனாகவும், தூய நித்தியராகவும் வந்த பரிசுத்தர். இந்தப் பாடல்களின் பொருள் என்று பரிசுத்த வேதாகமத்தின் பிரதி பலிப்பாகக் காணப்படுகின்றன. மீகா முதலாம் அதிகாரம் வசனம் 3ல் "இதோ கர்த்தர் தமது ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருகிறார். அவர் இறங்கிப் பூமியின் உயர்ந்த இடங்களை மிதிப்பார்" என்று வாசிக்கின்றோம்.

**திருவாய் மொழி** யில் ஜோதியைப் பற்றியும் மனிதனாக அவதரித்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறும் பாடல் :

"துயரில் சுடரொளி தன்னுடைச் சோதி
நின்ற வண்ணம் நிற்கவே
துயரின் மலியும் மனிதப் பிறவியில் தோன்றிக்
கண்காண வந்து
துயரங்கள் செய்தே தன் தெய்வநிலை உலகில்
புகவைக்கும் அம்மான்
துயரமில் சீர்க்கண்ணன் மாயன் புகழ்
தூற்ற யானோர் துன்பமிலனே"

இதன் பொருள் யாதெனில் துன்பம் நிறைந்த மனித வாழ்க்கையில் ஜோதி வடிவான தெய்வம் மனிதப்

பிறவியில் தோன்றி மக்களோடு மக்களாக வாழ்ந்து துயரப்பட்டு, மனுக்குலத்தைப் பாவ இருளிலிருந்து மீட்டு தமது தெய்வத்தன்மையை மனிதருள்ளத்தில் விளங்கும் படி செய்தார்.

**அகத்தியர்** எல்லா ரிஷிகளின் பாடல்களையும் படித்த பின்பு தனது கருத்தைக் 30 பாடல்களின் மூலம் தெளிவுபடுத்துகிறார். அதில் சில பாடல்களைப் பற்றிச் சிந்திப்போம். இதில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை **பரமகுரு** என்று சுட்டிக்காட்டுகிறார்.

"ஓடுகின்ற வகைகளெல்லாம் உரைத்துப் போட்டேன்
உலகுதனில் மார்க்கமெல்லாம் உவந்து சொன்னேன்
தேடுகின்ற புராணமெல்லாம் பொய்யே என்றேன்
சிவன் விஷ்ணு பிரம்மாவெல்லாம் பேயே என்றேன்
ஆடுகின்ற தீர்த்தமெல்லாம் அசத்தியென்றேன்
அஞ்ஞானம் பண்ணுகின்ற அகந்தையென்றேன்
பாடுகின்ற முப்பதுக்குள் அடக்கிப் போட்டேன்
பரமகுரு சொன்னபடி பாடினேன்"

இந்தப் பாடலைக் கேட்ட மற்ற ரிஷிகளும் ஞானிகளும் அவரின் மற்ற பாடல்களையும் கேட்க ஆவலாயிருந்து அகத்தியரைப் பாடும்படி வற்புறுத்தினார்கள்.

சீடர்களின் ஆவலைப் பார்த்து வியந்த **அகத்தியர்** வேதாந்தத் தமிழ்மார்க்க உண்மைகளைச் சொல்லுகிறேன். பெரியோர்கள் மற்றும் பண்டிதர்கள் தன் மேல் கோபம் கொள்ளக்கூடாது என்று கூறி பாடலைப் பாடுகிறார்.

"வேதாந்தத் தமிழ்மார்க்க முறையைக் கேளு
விரிந்துரைக்கப் பெரியோர்க்குக் கோபம் வேண்டாம்
நாதர் என்னு மும்மூர்த்தி நகரப் பேய்கள்
நாடுதனில் பலப்பல தந்திரங்கள் பண்ணி
காதாந்த மாயவலை கண்ணிக் குற்றி
காசிகங்கை என்று நவதானம் பண்ணி
மாதந்த உருவமே எடுத்து இந்த
வையகத்தை மயக்கினார் வகுத்துப் பாரே"

நமது நாட்டில் பல தெய்வ வணக்கமும், விக்கரக ஆராதனையும் இருந்ததில்லை. இதை நன்கு அறிந்துள்ள சித்தர்கள் இப்பாடலைக் கேட்டவுடன் இப்பழக்கங்கள் யாரால் ஏற்படுத்தப்பட்டன என்று **அகத்தியரைக்** கேட்டனர். சொல்லுகிறேன் கேளுங்கள் என்றார்.

"தேடுவாய் புலத்தியனே நன்றாய்க் கேளு
திங்கிடைத் தேடாதே தெளியச் சொன்னேன்
பாடுவார் பதினெட்டுப் புராணங்கட்கும்
பாரதமும் கட்டப்பா பரியா சங்கள்
நாடுதனில் பிராமணர்கள் பிழைக்கச் செய்த
நவக்கிரக கட்டப்பா நம்ப வேண்டாம்
ஓடுவார் அருள்பாதம் பூசை செய்து
உத்தமனே கண்ணீராலே கழுவுவாயே"

ஆகையால் சித்தர்களே மெய்யான கடவுளைத் தேடுங்கள் நம் முற்பிதாக்கள் தொலைத்துப் போட்ட நித்திய வாழ்வை தேடுங்கள் என்று அகத்தியர் அழுத்தம் திருத்தமாக அறிவுறுத்துகிறார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த **சிவவாக்கியர்** என்ற சித்தர், அகத்தியர் அனுமதியுடன் மனதுருகிப் பாடுகிறார் கேளுங்கள்.

"ஓசையுள்ள கல்லை உடைத்து உருக்கள் செய்கிறீர்
வாசலில் பதித்த கல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
பூசைக்கு வைத்த கல்லில் பூவும் நீரும் சாத்துகிறீர்
ஈசனுக்குகந்த கல் எந்தக்கல் சொல்லுமே"

இதன் பொருள் தட்டினால் ஓசைவரும் கல்லை உடைத்து உருவங்கள் செய்யப்படுகிறது. அதே கல்லை வாசற்படியாக்கி அதை மிதிக்கிறோம். அந்தக் கல்லையே பூசைக்கு வைத்து அதன் மேல் தண்ணீரும், பால், சந்தனம் ஆகியவற்றை ஊற்றுகிறோம். இந்தக் கல்லில் கடவுளுக்கு ஏற்றகல் எந்தக்கல்.

இதைப் பரிசுத்த வேதாகமத்தில் ஏசாயா 44ம் அதிகாரம் 9ம் மற்றும்10ம் வசனத்தில் "விக்கிரகங்களை உருவாக்குகிற யாவரும் வீணர், அவர்களால் இச்சிக்கப்பட்டவைகள் ஒன்றுக்கும் உதவாது, அவைகள் ஒன்றும் காணாமலும், ஒன்றும் அறியாமலும் இருக்கிறதென்று தங்களுக்கு வெட்கமுண்டாக அவைகளுக்குத் தாங்களே சாட்சிகளாயிருக்கிறார்கள். ஒன்றுக்கும் உதவாத தெய்வத்தை உருவாக்கி, விக்கிரகத்தை வார்ப்பிக்கிறவன் எப்படிப்பட்டவன்?

மேலும் பாடுகிறார்,

"கட்டையால் செய்தேவரும் கல்லினால் செய்தேவரும்
மட்டையால் செய்தேவரும் மஞ்சளால் செய்தேவரும்
சட்டையால் செய்தேவரும் சாணியால் செய்தேவரும்
வெட்டவெளிய தன்னிமற்று வேறு தெய்வம் இல்லையே"

இப்பாடலின் பொருள் மரத்தால், கல்லால் ஏதோ ஒரு மட்டையால், சாப்பிடும் மஞ்சளால், துணியில், சாணியில் உருவங்கள் செய்து வெட்ட வெளியில் அதை வைத்து வணங்குவது தெய்வங்களா?.
சிவவாக்கியர் இந்தப் பாடல்களின் மூலம் விக்கிரக ஆராதனையால் கடவுளை வழிபடக்கூடாது என்றும், கடவுளைப் பற்றிக்கொள்ளவும் முடியாது என்றும் தெளிவுப்படுத்துகிறார்.

இதைப் பரிசுத்த வேதாகமத்தில் யாத்திராகமம் 20ம் அதிகாரம் 3,4,5ம் வசனங்களில் "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்" என்பதே தேவன் மனுக்குலத்திற்கு பேசிச் சொல்லிய வார்த்தைகள்.

ஏசாயா 42ம் அதிகாரம் 17ம் வசனத்தில் "சித்திரவேலையான விக்கிரகங்களை நம்பி, வார்ப்பிக்கப்பட்ட சுரூபங்களை நோக்கி, நீங்கள் எங்கள் தேவர்கள் என்று சொல்லுகிறவர்கள் பின்னிடைந்து மிகவும் வெட்கப்படுவார்கள்".

சிவவாக்கியர் விக்கிரக வணக்கம் பற்றி கீழே பாடலில் குறிப்பிடுகிறார்.

"நட்டுவைத்த தேவரும் நடாதுவைத்த தேவரும்
சுட்டுவைத்த தேவரும் சுடாது வைத்த தேவரும்
இட்டுவைத்த இடத்தைவிட்டு எழுந்திராத தேவரும்
வட்டமிட்டு மாந்தர்கள் வணங்கும் வாறு எங்கனே

நட்டகல்லை தெய்வமென்று நாடி புஷ்பம் சாந்துநீ
சுற்றி வந்து முணுமுணு என்று சொல்லும்ந்திரமேதடா
நட்ட கல்லும் பேசுமோ நாதனுள் இருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ"

இந்தப் பாடல்களின் பொருள் யாதெனில், நட்டும் நடாமல் வைத்த கற்கள் தீயில் சுட்டும் சுடாமலும் வைத்த சுரூபங்கள் அவைகள் வைத்த இடத்திலிருந்து எழுந்து வராது. அதைக் கடவுள் என்று நம்பி அதன் மேல் பூக்கள் சூடி சில மந்திரங்களைச் சொல்வது வீணானது. கடவுள் உனக்குள் இருக்கும் போது நட்டு வைத்த கல் பேசுமோ?. அப்படிப்பட்ட உருவங்களை மனிதர்கள் எப்படி வணங்குகிறார்கள்.

இதற்கு பரிசுத்த வேதாகமத்தில் சங்கீதம் 115ம் அதிகாரம் 4ம் வசனம் முதல் "அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது, அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது. அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது, அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது. அவைகளுக்குக் கைகளிருந்தும் தொடாது, அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது, தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது. அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப் போலவே இருக்கிறார்கள்." சங்கீதம் 135: 15-18.

ரோமர் 1ம் அதிகாரம் 23ம்வசனத்தில் "அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும்பிராணிகள், ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்." என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது.

மேலும் சிவவாக்கியர் பாடுகிறார்:

"தேவர் தேவ ரென்றுநின்று தேடுகின்ற மூடர்காள்
தேவர் யாவ ரென்றறிந்து தேடவு மறிகிலீர்
மூவர் தேவ ரென்றுநீர் மொழிந்ததென்ன நியாயமோ
மேவ தாக உம்முள்ளே விரித்துணர்ந்து கொள்ளுமோ"

இப்பாடலின் பொருள் மூடர்களே! கடவுள் யாரென்று அறிந்து கொள்ளாமல் தேடிக் கொண்டிருக்கிறீர்கள். சிவன், பிரம்மா, விஷ்ணு என்ற மூவர்தான் கடவுள் என்று கூறுகிறீர்களே. மேலாக கடவுள் உன்னுள் இருக்கிறார் என்று அறியாமலிருக்கிறீர்களே.

"கழுதைகட்டி ஓமஞ்செய்தால் கழுதை துண்ண மாகுமோ
பழுதுகற்ற மாந்தர்காள் பரமசிவன் கர்த்தனோ
முழுதுமான ஞானரூப மூர்த்திநின்ற தப்பறம்
எழுதுமாதி யந்தமு மிதயமுங் கடந்ததே"

இந்தப் பாடலின் பொருள் கழுதையைக் கட்டி வைத்து ஹோமம் செய்து பூசை செய்தால் கழுதை கடவுளாகுமோ? அறிவில்லாத மாந்தர்களே பரமசிவன் கடவுளா? ஆதியும் அந்தமும் கடந்து நின்ற ஞானமூர்த்தியை தேடாததென்ன?.

"அரியுமல்ல ஐயனுமல்ல அரனுமல்ல அப்புறம்
கருமைசெம்மை வெண்மையும் கடந்து நின்ற காரண
பெரியதல்ல சிறியதல்ல பெண்ணுமாணு மல்லவே
துரியமுங் கடந்துநின்ற தூரதூர தூரமே"

இப்பாடலின் பொருளாவது சிவனுமல்ல, பிரம்மாவுமல்ல, விஷ்ணுமல்ல, பெரியவனும் சிறியவனுமல்ல, ஆணும் பெண்ணுமல்ல எல்லாவற்றையும் கடந்து நின்ற மெய்பொருள்.

"தூரதூர தூரமென்று சொல்லியோடும் வீணரே
பாரும்விண்ணு மெங்குமாய்ப் பரந்தமெய்ப் பராபரம்
ஊருநாடு காடுபோ யுழன்றுதேட வேண்டுமோ
நேரதாக வும்முளே நினைந்தறிந்து கொள்ளுமே"

இதன் பொருள் வீணரே எங்கும் நிறைந்த மெய்ப்பொருளைத் தேடாமல் பல ஊர்களுக்கும், பல நாடுகளுக்கும், பல காடுகளுக்கும் சென்று மெய்ப்பொருளைத் தேடவேண்டுமோ. அந்த மெய்ப்பொருள் உனக்குள் இருக்கிறதென்று தெரிந்துகொள்.

"காணவேணு மென்றுநீர் கடல்மலைக ளேறுவீர்
ஆணவம தில்லவோ அறிவில்லாத மூடர்காள்
வேணுமென்று ஈசர்பாத மெய்யுளே விளங்கினால்
காணலாகும் நாதனைக் கடந்துநின்ற சோதியை"

இதன் பொருள் அறிவில்லாத மூடர்களே மெய்ப்பொருளாகிய ஜோதியை காணவேண்டுமென்று கடல், மலை, காடுகளென்று அலைகிறீர்களே. நீ வேண்டுகின்ற கடவுளின் பாதம் உனக்குள்ளே இருந்தால் மெய்யான ஜோதியை நீ காணலாம்.

"ஓடியோடி யோடியோடி உட்கலந்த சோதியை
நாடிநாடி நாடிநாடி நாள்களும் கழிந்துபோய்
வாடிவாடி வாடிவாடி மாண்டுபோன மானிடர்
கோடிகோடி கோடிகோடி எண்ணிறந்த கோடியே"

பொருளாவது உனக்குள் வாசம்செய்யும் ஜோதியை ஒடி ஒடி, நாடி நாடித் தேடாமல் நாட்கள் கழிந்து போனதால் மனம் வாடி இறந்து போன மனிதர்கள் என்னற்ற கோடி. மேலே கண்ட

பாடல்களுக்கெல்லாம் முத்தாய்ப்பாக பரிசுத்த வேதாகமம் விடையளிக்கிறது யோவான் 1ம் அதிகாரம் 9ம் 10ம்வசனங்களில் "உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி. அவர் உலகத்தில் இருந்தார். உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று." யோவான்: 1: 9,10.

ஆகவே கடவுள் என்பவர் யார் என்று தீர்க்கமாய் ஆய்வு செய்வோம் என்று சிவவாக்கியர், அகத்தியரிடம் கேட்கிறார். அதற்கு அகத்தியர் மிகுந்த பரவசமடைந்து நன்றாய் சொன்னாய் நீ, இன்னும் என்னுடையப் பாடல்களைக் கேளுங்கள்.
ஆவலாய் இருந்த சீடர்களுக்கு **அகத்தியர்** மேலும் பாடத் தொடங்கினார்.

பரம்பொருளாகிய மெய்க்கடவுளை அறிந்து கொள்ளாதிருப்பதே மோசம் போவதற்குச் சமம். இப்படி தெளிவு இல்லாமலும் கடவுளை அறியாமலும் மக்கள் மோசம் போவதைக் கவனியுங்கள் என்று சொல்லிவிட்டு **அகத்தியர்** பாடுகிறார்.

"பாரப்பா இப்படியே தெளிவு இல்லாமல்
பராபரத்தை அறியாமல் மோசம் போறார்
ஆரப்பா எதிர்ப்பார்கள் என்னோடே தான்
அஞ்ஞான மூடர்கள் அதை எண்ணார்கள்
வேரப்பா சிவலிங்கம் விட்டுனுலிங்கம்
வேதாந்த லிங்கத்தை விரித்துப் பார்த்தால்
சேரப்பா கசுமால நாற்றம் நாற்றம்
சிவம்வேணும் என்று தினம் செபத்தைச் செய்யே"

இதைப் பரிசுத்த வேதாகமத்தில் ரோமர் 1:28ல் "தேவனை அறியும் அறிவைப் பற்றிக் கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால் தகாதவைகளைச் செய்யும்படி தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்பு கொடுக்கிறார் என்று நாம் வாசிக்கிறோம்". ஆகையால் மனிதர்களே உண்மையான கடவுள் யார் என்று அறிந்து தினமும் ஜெபத்தை நமக்குக் கற்பித்தபடி செய்வோமாக.

**அகத்தியர்** லிங்க வழிபாட்டை கசுமால நாற்றம் என்று செப்புகிறார். ஏனென்றால் ஆண், பெண் பிறப்புறுப்பை வணங்குவதே அருவருக்கத்தக்க வழிபாடு அச்சில் ஏற்றமுடியாத கதைகள் அவை. அதை இங்கே விவரிக்க முடியாத, கற்பனைக் கெட்டாத அசிங்கமான கதை. மெய்க் கடவுளுக்கு மனைவி மக்கள் கிடையாது. காருண்யத் தொழில் தான் கடவுள் அன்றாடம் செய்கிற பணி. இதை விளக்கும் பாடலைப் பாருங்கள்.

"கடவுளுக்குப் பெண்டேது பிள்ளையேது
காமகுண லீலை முதலான தேது
கடவுளுக்குப் பகடி சீட்டு தாயமேது
காடுகளில் வேட்டைக்குத் திரிவதேது
கடவுளுக்கு காமிகளின் தொழிலே யில்லை
காருண்யத் தொழில் ஒன்றே கடவுளின் பாரம்"

பாவப்பிடியில் அகப்பட்டு நரகத்தின் வாயிலுக்கு போகிற பாவிகளைக் காப்பாற்றும் பொருட்டுத் தனக்குத்தானே மகனாகி, தம்மையே பலியாக்கிய தெய்வம் யார்? இந்த விபரங்களைக் கேட்ட சீடர்கள் எல்லாம் மிகவும் மனதுருகி உணர்ச்சிவசப்பட்டு அகத்தியரை இன்னும் பாடல் பாடும்படி சொன்னார்கள். இதோ கேளுங்கள் சீடர்களே என்று அகத்தியர் பாடுகிறார்.

"காணப்பா கோயிலென்றும் தீர்த்தமென்றும்
காசினியிற் செம்பால் விக்கிரகமென்றும்
தோணப்பா வறியார்கள் மூடச்சாதி
சொரணை கெட்ட மடையரப்பா சாம்பற்பூசி
வீணப்பா வெறும்பிலுக்காய்ச் சைவமாடு
வேரோடே வந்தாற்போற் சிலுப்பிக்கொள்வார்
கோணப்பா பலநூல்கள் புராணம்பார்த்துக்
கொடிதான தீயினிலே வெந்திட்டாரே."

இதன் பொருள் விக்கிரகம், தீர்த்தம், சாம்பல், விபூதி இவைகளினால் பாவம் நீங்காது இதைச் செய்வதனால் நமக்கு சுத்திகரிப்பு இல்லை, கொடியதான நரகத்தில் தள்ளப்படுவோம்.

"கைக்கொள்ள வேணும் என்றால் இன்னும் வேறே
கற்பனையும் உண்டு அதைக் கருத்தில் வைத்தே
பைகொண்ட பிதா மாதாப் பாதம் போற்றி
பழிமோக நினைவகற்றிப் பாவை மாரைத்
திக்கென நினையாமல் இருட்டைப்போக்கி
சிவம்வேணும் என்று தினம் செபத்தைச் செய்து
மெய்கொண்டே இருந்திடுவாய் சொல்லிப் போட்டேன்
வேதாந்த வேதத்தின் வெளிச்சமாமே"

அன்பும் இரக்கமும் கிருபையையும் நமக்கு அளிக்கிற தேவன் மனிதன் கடைப்பிடிக்க வேறு கற்பனைகளையும் கொடுத்திருக்கிறார் அவைகளை மனதிலிருத்தி தாய் தந்தையின் பாதம் போற்றி மோக எண்ணங்களை அகற்றி, பெண்களை இச்சையோடு எண்ணிக் கொண்டிருக்கும் பாவமாகிய இருளைப் போக்கி முக்தி வேண்டும் என்று தினமும் பிரார்த்தனை செய்யுங்கள் என்று சீடர்களுக்குப் போதிக்கிறார்.

நீதிமொழிகள் 31ம் அதிகாரம் 3ம்வசனத்தில் "ஸ்திரீகளுக்கு உன் பெலனையும் ராஜாக்களைக் கெடுக்கும் காரியங்களுக்கு உன் வழிகளையும் கொடாதே." 1கொரிந்தியர் 7ம் அதிகாரம் 1ம்வசனத்தில் "ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது."

நிசப்தமான சீடர்கள் கண்ணீர்மல்க கடவுளின் கற்பனைகளைக் கூறுமாறு வேண்டுகின்றனர். உற்சாகமடைந்த அகத்தியர் பாடுகிறார் கேளுங்கள்.

"தெரிசிப்பாய் புலத்தியனே நன்றாய்க் கேளு
செப்பினதோர் நூல்கள் எல்லாம் சுட்டுப்போடு
அரிசிப்பாய் ஓர்வழி மெய்ஞ்ஞானப் பாதை
அடைவதற்கு அடையாளம் ஒன்று சொல்லுவேன்
பரிசிப்பாய் பத்துமொழி கையிற்கொண்டு
பரப்பிரம்மம் ஒன்றையே நாடிக் கொண்டு
வரிசிப்பாய் நிலைதவறா மார்க்கம் தேடி
வணங்குமந்த மனற புகுந்து வணங்குவாயே"

பத்துவழி என்பது பரிசுத்த வேதாகமத்தில் யாத்திராகமம் 20ம் அதிகாரத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பத்துக் கட்டளைகள். ஆகையால் மற்றவைகளைச் சுட்டு எரிக்க வேண்டும் என்று அகத்தியர் ஆணித்தரமாகப் பாடியுள்ளார். கி.பி முதலாம் நூற்றாண்டில் எபேசு பட்டிணத்தில் கிறிஸ்தவ மார்க்கம் பரவினபோது பொய் போதகங்களில் ஈடுபட்டிருந்தவர்கள் தங்கள் முந்திய மார்க்கத்தின் புத்தகங்களைக் கொண்டு வந்து எல்லார் முன்னிலையிலும் தீயிட்டுக் கொளுத்தினார்கள் என்று அப்போஸ்தலர் 19:19ல் நாம் வாசிக்கிறோம்.

பிரியமானவர்களே! கர்த்தருக்கு நிகரானவர் யார்? ஒருவருமே அவருக்கு நிகராக முடியாது. ஆகையால் கருத்தோடு ஆராய்ந்து பார்த்து திரித்துவத்தையும், பத்து நெறிகளாகிய பத்துக் கட்டளைகளையும் உணர்ந்து மோசம் போகாமல் செயல்படுங்கள். இக்கருத்தை விளக்கும் பாடலை அகத்தியர் பாடுகிறார்.

"கருதினார் இப்படியே சொன்னேன் அப்பா
கயிலாய இடம் எங்கே கருவூர் எங்கே
பருதியடா உலகமது பனியின் வாழ்வு
பராபரனார் ஆறுசொயம் பகர்ந்த ஜோதி
ஒருவருமே நிகராத வஸ்து அப்பா
ஓகோகோ மயங்காதே ஊன்றிப் பார்த்து
திரிபொருளை அறிவினால் உணர்ந்து பார்த்து
தெரிசிப்பாய் நெறிபத்தும் தெரிகிப்பாயே"

மெய்மறந்த சித்தர்கள் அகத்தியர் இன்னும் பாடுவார் என்று காத்திருந்தார்கள். ஆனால் அகத்தியர் நாளை பாடுகிறேன் என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

மறுநாள் பாடல் பாட வந்த அகத்தியரிடம், அழுகணி சித்தர் தானும் ஒரு பாடல் பாட வேண்டுமென்று அடம்பிடிக்கிறார். இதைப் பார்த்த கொங்கணவர் என்ற சித்தர் சும்மா இரும்வே நீர் அப்புறம் பாடும் என்று விளையாட்டாகக் கோபப்படுகிறார். அகத்தியரோ நீர் பாடும்வே பாடும்முன் அதன் பொருளைக் கூறிவிட்டுப்பாடும் என அன்புக் கட்டளையிடுகிறார்.

அண்ட சராசரங்களையும் படைத்த ஆண்டவர் முதலாவது மனிதரை பையூர் என்னும் கர்ப்பப்பையாகிய கருவூரிலும், இரண்டாவது பொய்யூர் என்னும் பூலோகத்திலும், மூன்றாவது மெய்யூர் என்னும்

பரலோகத்திலும் மனிதன் வாழும்படி வழிவகுத்துள்ளார் என்று **அழுகணிச்சித்தர்** பாடிய பாடலைப் படியுங்கள்.

"பையூரிலேயிருந்து பொய்யூரிலேபிறந்து
மெய்யூர் போவதற்கு வேதாந்த வீடறியேன்
மெய்யூர் போவதற்கு வேதாந்த வீடறிந்தால்
பையூரும் பொய்யூரும் பாழாய் முடியாதோ"

இதற்கு பரிசுத்த வேதாகமத்தில் பிரசங்கி 5ம் அதிகாரம் 15ம் வசனத்தில் "தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய் வந்தான், வந்ததுபோலவே நிர்வாணியாய்த் திரும்பப் போவான்" என்று வாசிக்கிறோம்.

கொங்கணவர் குறுக்கிட்டு அகத்தியரே நேற்றையப் பாடல் ஒன்றில் திரிபொருளையும் நெறிபத்தையும் பற்றிக் குறிப்பிட்டு பாடினீர். நெறிபத்து ஆண்டவன் வெளிப்படுத்திய பத்துக் கற்பனைகள், ஆதலால் திரிபொருளைப் பற்றி விளக்கமாய் கூறும் என்றார். அதற்குப் பாடுகிறேன் கேளும் கொங்கணவரே என்றார் **அகத்தியர்.**

"முச்சுடரும் ஒன்றாகும் மும்மூர்த்தியல்ல
மூவருமே ஆளுருவம் ஒன்றேயாகும்
அச்சுதா இவர்களுமே ஆண் பெண் அல்ல
அரனும் அல்ல லிங்கம் அல்ல அநாதியான
சச்சிதானந்தனையே வணக்கம் செய்து
சற்குருவைத் தரிசித்துப் பாதம் பற்றி
எச்சரிக்கை கொண்டு நட அப்பா - அப்பா
எண்ணில்லா முக்திவழி எய்துவாயே"

இக்கவியின் பொருளை அகத்தியரே சீடர்களுக்கு விளக்குகிறார். முச்சுடர் என்பது சிவன், விஷ்ணு, பிரம்மா அல்ல, சர்வத்தையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதா,குமாரன், பரிசுத்த ஆவியாகிய கர்த்தரே. சச்சிதானந்தக் கடவுளை தொழுது கொள்ள சற்குருவாகிய இயேசுநாதரைத் தரிசித்து அவருடைய திருவடிகளைப் பற்றிக் கொள். 1யோவான் 5:7ல் பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்று வேதம் கூறுகிறது. இயேசுவைப் பற்றிக் கொள்ள நாம் என்ன செய்யவேண்டும் என்று கரிசனையுடன் அகத்தியரைப் பார்த்து சிவவாக்கியர் கேட்கிறார்.

உடனே **அகத்தியர்** ஒரு பாடலைப்பாடி விளக்கமும் தருகிறார்.

"கண்ணீரைத் தான்விட்டு உள் அசுத்தம் போக்கி
காரணசற்குருவினால் கசட்டைப் போக்கி
வெண்ணீராம் ஆதித்திரு வேதாந்தத்தின்
வீடேக வேணும் என்றால் விரும்பிக் கேளு
தண்ணீரை உருவேற்றித் தியானம் செய்து

சச்சிதானந்தனையே சரணம் செய்து
கண்ணீரை விட்டழுது கசட்டைப் போக்கி
கரை ஏறவேணும் இதைக் கைக்கொள்வீரே"

உள்ளத்திலிருக்கும் பாவ அழுக்கைப் போக்க பாவ அறிக்கையிட்டு வருந்திக் கண்ணீர்விட்டு அழவேண்டும். வேதாகமத்தில் 1யோவான் 1:9ல் "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்."
சீடர்களே இன்னும் கேளுங்கள் என்று அடுத்தப் பாடலைப் பாடுகிறார்.

"கழுவியே ஆத்துமாவைப் புடத்தில் போட்டு
காசகன்ற தட்சணையாய் வைத்துக் கொண்டு
மெழுகுவாய் இருதயத்தைக் கண்ணீராலே
மெழுகினபின் தேவபக்தி அதிலேவைத்து
தொழுகுவாய் தவஞானம் தீபம் ஏற்றி
தோத்தரிப்பாய்சகல நன்மை சுரூபிகண்டாய்
முழுகுவாய் சிறு பொய்கைக்குள்ளே நீயும்
முக்திபரர் அருகிலிருப்பாய் மூச்சுடாராய்த்தானே"

மனமாகிய ஆத்துமாவைப் புடமிட்டு சோதித்துக் கழுவி அதை எந்தக் குற்றம் குறையுமில்லாத காணிக்கையாக வைத்து உள்மனமாகிய உன் இருதயத்தை நன்கு மெழுகி பின்பு தேவபக்தியை அதிலே வைத்து, தவஞான தீபம் ஏற்றி சகல நன்மைகளுக்கும் காரணராகிய கர்த்தரைத் தொழுதுகொள். சிறு குளத்திலே திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பெற்றுக்கொள். நீ அப்படிச் செய்தால் மூச்சுடராகிய பரம பிதாவின் அருகில் இருப்பாய் என்றார்.

பிரியமானவர்களே, நம் இருதயம் நம்மைக் கறைப்படுத்துகிறது. ஏரேமியா 17:9ல் எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அடுத்த வசனத்தில் கர்த்தராகிய ஆண்டவர் இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதிக்கிறவராயிருக்கிறார். மாற்கு 7:21-23ல் மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும், புறப்பட்டுவரும். பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்.

ஆகையால் எச்சரிக்கையாய் வாழுங்கள் என்று சீடர்களுக்கு அறிவுறுத்திய **அகத்தியர்**, எனக்கு மெய்யான கடவுள் யார் என்று உணரச் செய்தப் பாடலைப் பாடுகிறேன் கேளுங்கள்.

"வணங்குவாய் ஜெகஜோதி ஒருவனாகி
மாநிலத்தை ஒரு நொடியில் வகுத்து மண்ணில்
குணமான மனிதரையையும் படைத்தபின்பு

குவலயத்தில் தான் உதித்துக் குருவாய் வந்து
சனமான சமுசாரம் ஒன்றில்லாமல்
சந்நியாசி போலிருந்து தவத்தைக் காட்டி
அன்பான சித்தர்களை இருத்திப்போட்டு
அகன்ட தளம் சென்றவரை அண்டுவாயே”

இதன் பொருள் :

1. ஜெகஜோதி ஒருவனாகி - யோவான் 1: 4,5,9 மத்தேயு: 4:15, 1தீமோத்தேயு: 6:16
2. மாநிலத்தை ஒரு நொடியில் வகுத்து - ஆதியாகமம்: 1: 3-25, எபிரேயர்:11: 3,
3. குணமான மனிதரை படைத்தபின்பு - ஆதியாகமம் 2: 7, 3: 22-24, மத்தேயு: 19: 4,
4. குவலயத்தில் தானுதித்து குருவாய் வந்து - மத்தேயு: 1: 21, லூக்கா: 1: 31,
5. சனமான சமுசார ஒன்றில்லாமல் - மத்தேயு: 8: 20, யோவான்: 1: 18, 16: 5,10, 28 யோவான்:17:1-26
6. சந்நியாசி போலிருந்து தவத்தைக் காட்டி - மத்தேயு: 10: 1-4
7. அன்பான சித்தர்களை இருத்திப்போட்டு - மாற்கு: 3: 13-19
8. அகன்ட தளம் சென்றவரை அண்டுவாயே - மாற்கு: 16: 6, 19 லூக்கா: 24: 6, 51 அப்: 1: 9, 2: 32

இந்தப் பாடலைக் கேட்ட சீடர்கள் உள்ளம் உருகி கண்ணீர் விட்டு நாம் இதுவரை உண்மையான கடவுளைத் தொழுதுகொள்ளாமல் விட்டுவிட்டோமே என்று ஏங்கினார்கள். அவர்கள் அகத்தியரை நெஞ்சார வாழ்த்தி மெய்சிலிர்த்தார்கள். இதையேன் உலகமக்கள் அனைவருக்கும் நீர் சொல்லவில்லை என்று வினவினார்கள். அப்பொழுது அகத்தியர் முத்தாய்ப்பாக இந்தப் பாடலைப் பாடிச் சித்தர்களை அமைதிப்படுத்தி மனங்குளிர வைத்தார்.

“அண்டாமல் இருப்பது என்ன என்று கேட்டால்
ஐயையோ சிவன் காற்று அகஸ்தியர் என்னும்
ஒன்றான மார்க்கமதை விரித்துக்காட்டி
உலகமதில் இந்நூலை விரிக்கச் செய்து
தண்டாமல் பொதிய மாமலையில் என்னைத் தாபித்துக்
தயங்காமல் இருக்கச் சொல்லி
ஒன்றான பரம்பிரமம் சொன்னார் சொன்னார்
ஒகோகோ புலத்தியனே உரைத்திட்டேன்.”

இந்தப் பாடலின் பொருள் அகண்ட தலம் சென்ற எம்பெருமானை இன்னும் நீ சென்று அடையாமல் இருப்பது என்ன அகஸ்தியா என்று கேட்டால், தேவ ஆவியானவர் முக்தி அடைய ஒரே மார்க்கத்தை உலகில் தெளிவுபடுத்திக் காட்டும் இந்நூலை அறிவித்துவிட்டு, பின்பு என்னை பொதியமலையில் பயப்படாமல் தங்கி வாழச்சொன்னார். ஒ அறிவுள்ளவனே! அவர் சொன்னதை உனக்குச் சொல்லிவிட்டேன்.

**விக்கிரக வணக்கத்தைப் பற்றி சங்கராசாரியார் மற்றும் சிவவாக்கியார் பாடியுள்ள சில பாடல்கள்**

**சங்கராசாரியார் பாடல்கள்:**

"எத்தனைதான் கல்லுகளைப் பூசித்தாலும்
ஈனர்களே உங்களுக்கு மோட்சமுண்டோ
சுத்தமுடன் தலைமுழுகித் தவஞ்செய்தாலும்
சொல்லரிய பேரின்பந் தோன்றுமோதான்
பித்தர்களே கல்லுகளை விலைக்குவாங்கிப்
பிரானென்றே சீலையிலே முடிந்துகொண்டு
செத்தபின்பு கயிலாயம் சேர்வோமென்றால்
சேர்வதில்லை அருநரகம் சேர்வீர்தானே."

இப்பாடலின் பொருள் என்னவெனில், நீங்கள் எத்தனை கற்சிலையைக் கடவுளாக நினைத்து பூஜை செய்தாலும் உங்களுக்கு மோட்சம் கிடைக்காது. நன்கு நதியில் நீராடி தவஞ்செய்தாலும் எல்லையில்லா பேரின்பம் கிடைக்காது. கற்சிலைகளை விலைக்கு வாங்கி அதை துணியிலே முடிந்து கொண்டு மோட்சம் அடைவோம் என்று நினைத்தால் நரகத்திற்கு தான் தள்ளப்படுவீர்கள்.

பாடல் 55:

"சற்குருவை அறியாம லுலகிலேதான்
சண்டாளர் கல்லுகளைத் தெய்வமென்று
பொய்க்குருக்கள் சொன்னபுத்தி தன்னைக்கேட்டும்
பூசைசெய்து கல்லுகளைப் போற்றிசெய்வார்"
"சொற்குருக்கள் தங்களுட செய்திகேட்டால்
சொர்க்கமுண்டோ நரகமல்லால் சொல்லும் போது
சற்குருவை அறிந்தவருக் குடனேமோட்சம்
சார்வதென்றே முன்னோர்கள் சாற்றினாரே."

இப்பாடலின் பொருள் இந்த உலகத்திற்கு வந்த உண்மையான மீட்பரை அறியாமல் சண்டாளர்கள் பொய்யான குருக்களின் வழிகாட்டுதலின்படி கற்களை தெய்வமென்று வணங்குவர். உண்மையான குருவை வணங்குபவர்களுக்கு மோட்சம் உண்டென்று முன்னோர்கள் கூறியுள்ளனர்.

பாடல் 61:

"மண்ணிலே பிறந்தகல்லை
வகைவகை தெரிந்தெடுத்தே
எண்ணிலா லிங்கமாக
இயலுடன் கோயில்கட்டிப்
பண்ணியே வைத்துப்பின்னும்
பலபல பூசைசெய்தால்
விண்ணிலே சேர்வதில்லை
வீணிலே நரகில்வீழ்வார்."

இந்தப் பாடலின் பொருள் வகை வகையானக் கற்களைத் தெரிந்து எடுத்து அதை கணக்கிலடங்கா லிங்கமாக (சிலையாக) உருவாக்கி, அதற்கு கோவில்கட்டி பலவிதமான பூஜைகளை செய்தாலும், மோட்சம் அடையாமல் நரகத்திற்கே செல்வர்.

பாடல் 106:

"செகவாழ்வை மெய்யென்று நம்பவேண்டாம்
தேசத்தைப் பொருளென்றும் திரியவேண்டாம்
பகைவாழ்வு சமயமதம் பார்க்கவேண்டாம்
பலகலையைப் பொருளென்று படிக்கவேண்டாம்
மிகையான பூசைகளைச் செய்ய வேண்டாம்
வேதத்தோர் தங்கள்மொழி விரும்பவேண்டாம்
தொகையாகப் பராபரத்தை வணங்கிநின்றால்
சுகமாகப் பரமபதம் சுகிக்கலாமே."

இப்பாடலின் பொருள் இந்த உலக வாழ்க்கையை நாம் உண்மையென்று நம்பவேண்டாம். இந்த தேசத்தை ஒரு பொருட்டாக எண்ணவேண்டாம். சமயமார்க்கங்களுக்கிடையே ஒரு பகையை பார்க்கவேண்டாம். பலகலையைப் படிக்காமலும் மிகுந்த பூஜைகளை செய்யாமலும் வேதத்தார் கூறும் பாடங்களை விரும்பாமலும் பரம்பொருளை ஒன்றையே செபித்து வணங்கி நின்றால் சுகமான வாழ்வுதனை (மோட்சம்) அடையலாம்.

**சிவவாக்கியரின் பாடல்கள் :**

"இருக்கு நாலு வேதமும் எழுத்தறவே ஓதினும்
பெருக்க நீறு பூசினும் பிதற்றினும் பிரான் இரான்
உருக்கி நெஞ்சை உட்கலந்து உண்மை கூற வல்லி ரேல்
சுருக்கமற்ற சோதியைத் தொடர்ந்து கூடலாகுமே."

இப்பாடலின் பொருள் ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களை முற்றும் கற்றிருந்தாலும், உடல்முழுவதும் திருநீர் பூசியிருந்தாலும், பரம்பொருளை நீ அறியமுடியாது. நெஞ்சை உருக்கி மெய் வழியில் நடந்து வந்தால் சுருக்கமற்ற சோதியை நீ அடையலாம்.

"காசிகாசி யென்றுநீர் கால்கடுக்க வோடுறீர்
காசியோடி யாடினும் கறுப்புவெள்ளை யாகுமோ
ஆசைபாசம் விட்டுநீ ரைவரு மொடுங்கினால்
காசிநீரு மும்முளே காணலாகு முண்மையே"

இந்தப் பாடலின் பொருள் கால்கடுக்க நடந்து காசி என்ற ஊருக்கு ஒடியும் உன்னால் கறுப்பை வெள்ளையாக்க முடியாது. உலகத்தின் ஆசைபாசங்களைத் துறந்து இறைவனை அண்டினால் மட்டுமே மெய்ப்பொருளை காணலாம்.

"கொடுத்தநாலு வேதமும் குசைப்பலும் குடுமியம்
பிடித்ததண்டு மாகவாழ் பிராமணப் புரட்டரே
நடித்தகோல மிங்குவிட்டு ஞானமோத வல்லிரால்
அடுத் திருந்த சோதியோ டமர்ந்திருக்க லாகுமே."

இப்பாடலின் பொருள் குடுமியை வைத்துக் கொண்டு நான்கு வேதங்களை சொல்லி நடித்து ஏமாற்றி வாழ்ந்து கொண்டிருக்கும் பிராமணர்களே, நீங்கள் நடிக்கும் கோலத்தை விட்டுவிட்டு மெய்ப்பொருளான சோதியை அறிந்து கொள்ளுங்கள்.

**சிவவாக்கியம்** 10ம் கவி

"அரியுமல்ல அரனுமல்ல அயனுமல்ல அப்புறங்
கருமை வெண்மை செம்மையுங் கடந்து நின்ற காரணம்
பெரியதல்ல சிறியதல்ல பெண்ணுமாணும் அல்லவே
துரியமும் கடந்து நின்ற தூரதூரதூரமே."

இதன் பொருள் கடவுள் பஞ்சேந்திரியங்களாலும் காணப்படாத கடந்த பொருளாயிருக்கும் போது அவரை எப்படி அறிய முடியும் ? உண்மை உள்ளத்தவர், உலக இயற்கையிலும், பக்தர் மூலமாயும், விசேஷமாய் குரு மூலமாயும் அறிய முடியும்.

**சிவவாக்கியம்** 315ம் கவி

"நீரிலே முனைத்தெழுந்த தாமரையின் ஓரிலை
நீரினோடு கூடி நின்றும் நீரில்லாத வாறுபோல்
பாரிலே முனை த்தெழுந்த பண்டிதப் பராபரன்
பாரினோடு கூடி நின்ற பண்பு கண்டிருப்பீரே."

இதன் பொருளாவது தாமரையானது நீரிலே முளைத்தும், நீருடன் ஒட்டிக் கொள்ளாதது போல, கடவுள் உலகத்தில், பாவ மனித ரூபத்தில் பிறந்து வேத பண்டிதராக வந்தாலும், பாவமில்லாத பரிசுத்தராக வாழ்ந்த தன்மையை அறிந்து வாழுங்கள்.

**திருமந்திரம் 1, 10: 27**

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருபாகம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே"

இதன் பொருள் குருவின் முகத்தைப் பார்த்தலும், அவருடைய நாமம் சொல்லலும், அவருடைய வார்த்தை கேட்டலும், அவருடைய குணத்தின் உருவம் இன்னதென்ன தியானித்தலும் தெளிவுண்டாக்கும்.

திருமந்திரம் 6, 1: 6

"சுத்த சிவன் குருவாய் வந்து தூய்மை செய்
தத்தனை நல்கருள் காணா அதி மூடர்
பொய்த் தகு கண்ணால் ஈமர் என்பர், புண்ணியர்
அத்தன் சிவன் என்றடி பணிவாரே"

இதன் பொருள் கடவுள் பரிசுத்த குருவாக இவ்வுலகத்தில் தோன்றித் தம்மை வெளிப்படுத்தின கிருபையை அறியாத மூடர் (பொய்யால் தன் இருதயத்தை மறைக்கும்படி செய்து கொண்ட மனக்கண் குருடானவர்கள்) அவரை நம்மைப் போல் மனிதன் என்பார். பக்தரோ, இவரே கடவுள் என்று கும்பிடுவார்கள்.

திருமந்திரம் 6: 14

"எல்லா உலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய்
நல்லார் உள்ளத்து மிக்கருள் கல்கலால்
எல்லாரும் உய்யக் கொண்டிங்கே அளித்தலால்
சொல்லார்ந்த நற்குரு சுத்த சிவமே"

இதன் பொருள் சர்வ அண்டத்திற்கும் எட்டாதவர், சர்வ மண்டலத்திலும் வியாபியாய் நல்லோர் உள்ளத்தில் மிகுதியான அருனைக் கொடுத்தலாலும், மனிதர் யாவரும் ஈடேற்றும் பெற இவ்வுலகத்தில் வந்து அருள் செய்தலாலும், சொல்ல முடியாத சற்குரு சுத்த சிவத்தன்மையுடையவராதல் வேண்டும்.

திருமந்திரம் 19ம் பக்கம்

"விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்க்கொண்டு
தண்ணின்ற தானை தலைகானல் மேல் வைத்து
விண்ணில் துருக்கி ஓர் ஒப்பில்லா ஆனந்தம்
கண்ணொன்று காட்டி கனிம்பதுத் தானே"

இதன் பொருள் பரலோகத்திலிருந்து இவ்வுலகில் இறங்கி, பாவ விணைகளுக்கு ஈடு செய்யும் பொருட்டு மனித சரீரத்தை எடுத்து, தனது கிருபை பொருந்திய மதத்தை மனித புத்திக்குக் காவலாக வைத்து, இருதய ஆசனத்தில் இருந்து கொண்டு, பாவத்தை நீக்கி களிப்புறச் செய்வானே.

பட்டிணத்தார் :

"எட்டுத்திசையும் பதினாறு கோணமும் எங்கும் ஒன்றாய்
முட்டித்த தும்பி முளைத்தோங்கும் சோதியை மூடரெல்லாம்
கட்டிச் சுருட்டித்தம் கக்கத்தில் வைப்பார், கருத்தில் வையார்
பட்டப் பகலை இரவென்று கூறிடும் பாதகரே"

இதன் பொருள் எங்கும் நிறைந்த சோதியாகிய கடவுள், பூவுலகில் வெளிச்சமாய் முளைத்து விளங்கினார். வெளிச்சமாய் வந்த கடவுளை, மூடர் தங்கள் இருதயத்தில் வையாமல் பகலை இரவென்று சொல்லும் பாதகரானார்கள்.

## வேதங்களில் இயேசு கிறிஸ்து

இந்து மக்களின் முக்கிய வேதங்கள் நான்கு ஆகும். அவைகளில் முதல் இரண்டு வேதங்களில் கடவுளின் தன்மையைப் பற்றி மிகத் தெளிவாக அர்த்தத்தோடு சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டுள்ளது.

**ரிக்வேதம்:**

"ஹிரன்யகர்பா, ஸமவர்த்தாக்ரே
பூதஸ்ய ஜாதா, பதிரேகா ஆஸீத்
சடாதாரா ப்ருத்விஷம் த்யாமுதேமம்
கஸ்மை தேவாய உறவிஷா விதேமம்"

இதன் பொருள் ஆதியில் எல்லாம் வல்ல கடவுள் மட்டுமே தனது ஆவியுடன் இருந்தார். ஆவியிலிருந்து ஒளியின் உருவில் தோன்றினார். எல்லாவற்றிற்கும் காரணரான கடவுள் வானத்தையும் மண்ணையும் படைத்தார். நாம் அவருக்கு காணிக்கை செலுத்துவோமாக.

இதை பரிசுத்த வேதாகமத்தில் ஆதியாகமம் 1ம் அதிகாரம் முதலாம் வசனத்தில் "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. ஆழத்தின் மேல் இருள் இருந்தது. தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார். தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார் வெளிச்சம் உண்டாயிற்று."

"உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி. அவர் உலகத்தில் இருந்தார். உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று." யோவான்: 1: 9,10.

மேலும் ரிக்வேதத்தில்

"ப்ருஷவேதம் ஸர்வம்
யத்பூதம் யச்சபவ்யம்
உதாம்ருதத்வஸ்ய ஈஸானா
யதானேனதிரோவறதி"

இதன் பொருள் இந்த மனிதரே இருந்தவையும் இருப்பவையும் இருக்க வேண்டியவையுமாவார். இவரே முடிவில்லா வாழ்வளிப்பவர். இவர் மனுக்குல மீட்புக்காக தனது தெய்வீக புனிதத்தன்மையை விட்டு மனிதத் தன்மைக்கு இறங்கி வந்தவர். ஒவ்வொருவருக்கும் தத்தம் செயல்களுக்கேற்ப கைம்மாறு அளிப்பார்.

பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படுத்தின விசேஷம் 1ம் அதிகாரம் 8ம் வசனத்தில் "இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர்".

வெளிப்படுத்தின விசேஷம் 22ம் அதிகாரம் 12ம் வசனத்தில் "இதோ சீக்கிரமாய் வருகிறேன் அவனவனுடைய கிரியைகளின் படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது."

மேலும் ரிக்வேதம் கூறுகிறது,

"தமேவம் வித்வானம் ருத்தர இஹபவதி
நான்ய பந்தா அயனாய வித்யதே"

இதன் பொருள் யாரெல்லாம் இம் மனிதரை (இயேசுவை) தியானத்தால் அடைவார்களோ, யாரெல்லாம் இவரை மனதார விசுவாசித்து உதடுகளால் துதிக்கிறார்களோ, அவர்களெல்லாம் இவ்வுலகிலேயே மீட்படைந்தவர்கள் இவரைத் தவிர மீட்பதற்கான வழி வேறில்லை. 1தீமோத்தேயு: 2: 6, ரோமர்: 10: 9.

மேலும் பாடல்

"சாந்தா ஹாரம் புஜக ஸயனம் பத்மநாமம் சுரேஸம்
விஸ்வா ஹாரம் ககன சதுர்ஸம் மேகவர்ணம் சுபாங்கம்
லஷிமிகாந்தம் கமலநயனம் யோகிபிர்த்யான கம்யம்
வந்தே விஷ்ணும் பவ பயஹரம் சர்வலோகைக்க நாதம்"

இதன் பொருள் பரிசுத்த வேதாகமத்தில் யோவான் 3ம் அதிகாரம் 16ம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ளது. "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை வணங்குவதற்கு ரிக் வேதத்திலுள்ள இந்த ஸ்லோகம் உபயோகப் படுத்தப்படுகிறது.

"ஓம் ஸ்ரீ ஏக புத்ராய நமஹ"

மேலும் ரிக்வேதத்தில் கூறப்பட்டுள்ளது.

"தம் யஜ்னம் பரிஷி ப்ரெனக்ஷன்
புருஷம் ஜாமக்ராதா
தேன தேவா அயஜன்தா
சாத்ய ரிஷயஸ்சயே"

எல்லாப் படைப்புகளுக்கும் தலைப்பேறான இந்த மூல புருஷர் யூப்பாவுடன் (மரத்தினாலான பலி கம்பம்) கட்டப்பட்டார். தேவர்களும் அரசர்களும் தங்களது அர்ச்சகர்களோடு இணைந்து பலியைச் செலுத்தினார்கள்.

விஸ்வகர்மா எனப்பட்ட பிரஜாபதியாகிய புருஷன் தன்னையே பலியாக்கி இரத்தம் சிந்தி மனுக்குலத்தை மீட்டுக்கொள்ள வேண்டும், சாம வேதத்தில் சிருஷ்டிகர்த்தாவும், ஜகத்ரட்சகருமான பிரஜாபதி என்ற மூல புருஷர் தம்மைத்தாமே பலியிட்டார் என்று கூறப்பட்டுள்ளது.

இப்படிப் பலியாகும் தெய்வத்தின்  இலட்சனங்களைப் பற்றி ரிக்வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**பலியின் இலட்சனங்கள் (சதபதா பிராமணா):**

| | |
|---|---|
| 1. ஊனமில்லாத பழுதற்ற ஆடாக இருக்க வேண்டும். | - 1. இயேசு குற்றமில்லாதவர். யோவான்: 8: 46 |
| 2. பாலுசு என்ற முள்கொடி அதின் தலையின் மேல் சுற்றப்பட வேண்டும். | - 2. இயேசுவின்  தலையில் முள்முடி சூட்டினார்கள். மத்தேயு: 27: 9,  யோவான்: 19: 2 |
| 3. அது ஒரு மரத்தில் கட்டப்பட வேண்டும். | - 3. இயேசு சிலுவை மரத்தில் அறையப்பட்டார். மாற்கு:15:24, லூக்கா:23:33, யோவான்: 19:18 |
| 4. அதின் நான்கு கால்களிலும் இரத்தம் வரும்படி ஆணிகளை வைத்துத் துளைக்க வேண்டும். | - 4. இயேசுவின் கைகளையும், கால்களையும் உருவக் குத்தினார்கள். சங்கீதம்: 22: 16 |
| 5. அதின் எலும்புகள் முறிவு படக்கூடாது. | - 5. இயேசுவின் எலும்புகளை முறிக்கவில்லை. யோவான்: 19: 33, 36 |
| 6. சாகும் போது அதின் வாயில் சோம பானம் கொடுக்கப்பட வேண்டும். | - 6. இயேசுவுக்கு கசப்புக் கலந்த காடியை குடிக்கக் கொடுத்தார்கள்.மத்தேயு:27:34, யோவான்:19:29 |
| 7. இறந்த பின் உடைகள் சேவகர்களால் பங்கிடப்படும். | - 7. இயேசு இறந்த பின் அவருடைய அங்கியை போர்ச்சேவகர்கள் பங்கிட்டுக் கொண்டார்கள். யோவான்: 19:21-24, மத்தேயு: 27: 35 |
| 8. இவ்வாட்டின் மாமிசம் புசிக்கப்பட வேண்டும். | - 8. இயேசு நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். மத்தேயு: 26: 26, மாற்கு: 14: 22 |
| 9. இந்த ஆடு மறுபடியும் உயிருடன் எழுந்து வரவேண்டும். | - 9. மரித்த இயேசு உயிர்த்தெழுந்தார். லூக்கா: 24: 6, மாற்கு: 16: 6 |

இவ்வாறாக பலி நிறைவேற்றப்பட்டது என்று அறிகிறோம். இந்த இலட்சணங்களுடன் எந்த அவதாரமோ, மனிதனோ இதுவரை பலியாக்கப்பட்டு இருக்கிறார்களோ,  பலியாக்கப்பட்ட பின்பு உயிர்த்தெழுந்து வந்திருக்கிறார்களா, இல்லை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே வேதங்களில் குறிப்பிடப்பட்ட விஸ்வகர்மாவாகிய பிரஜாபதி என்று தெரிந்து கொள்வோம்.

**சாமவேதம்:**

"ஹீரோ சல்லத் பிரோதசே
சுசிமன சுரசுமேதைகத்முக்திகானம்"

இதன் பொருள் பாவம் செய்த ஒவ்வொரு மனிதனும் விலையேறப் பெற்ற இரத்தத்தால் கழுவப் பட்டாலொழிய தெய்வத்தின் இராஜ்ஜியத்திற்குள் போக முடியாது.

**இந்திய சித்தர்கள் கண்ட பலியின் நன்மை பாடல்**

"எண்ணிறந்த அறம் செய்தால் இயேற்றுகின்ற பாவம் போகா
புண்ணியமாம் ஸ்தலங்கள் என போய்வந்தால் நாம் செய்த பாவம் போகா
எண்ணிலிறு கோயில்எல்லாம் கண்டுவந்தால் நாம் செய்த கருமம் தீரா
மண்ணிலன்று பரன் படித்த செங்குருதி ஒன்றாலே நாம் செய்த கருமங்கள் பாவங்கள் தீரும்."

**முண்டகோஉபநிஷம்:**

"ப்ளவா ஹெத்யே அத்ருதா யஜ்னாரூபா
அஷ்ட தஸோக்தமவரம் யேசு கர்மா
அந்தோனைவ நீயமான யதாந்தா"

இதன் பொருள் குருக்களே நீங்கள் ஒப்புக் கொடுக்கும் பலிகளிலெல்லாம் தவறானவை. அவையெல்லாம் உடைந்த படகுகள். உங்களில் யாரெல்லாம் இதைச் செய்கிறார்களோ அவர்களெல்லாம் குருடர்களுக்கு வழி காட்டும் குருடர்கள் என்று கூறப்பட்டுள்ளது.

பரிசுத்த வேதாகமத்தில் மத்தேயு 23: 23-26 வற்றுடன் ஒப்பிட்டுப் பாருங்கள் மனுக்குலத்தின் பாவங்களைப் போக்க, மன்னிக்கப்பட இறைமகன் இயேசு கிறிஸ்து பாவநிவாரணபலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார்.

இதை **உபநிஷத்** கீழ்க்கண்டவாறு விளம்புகிறது.

பிரஜாபதிர் யக்ஞஹ - தேவன்தாமே உண்மையான பலி

தெய்வம் தம்மைத்தாமே பலியாகச் செலுத்தி பாவத்திலிருந்து மீட்பை அருளுவார் சிருஷ்டி கர்த்தாவும் ஜகத் இரட்சகருமான ப்ரஜாபதி என்ற மூல புருஷர் தம்மைத் தாமே பலியிட்டார். இதை வேதங்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றன.

வேதாகமத்தில் எபிரேயர்: 9: 11,12ல் தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகாபரிசுத்தத்தினாலே பிரவேசித்து நித்திய மீட்பை உண்டு பண்ணினார்.

"ப்ரஜாபதிர் தேவம்யஹம் ஆத்துமானம் யக்ஞம் க்ருத்வா பிராயச் சித்"

உபநிஷத்தில்

*"வாக்ஞோவை ப்ரம்மம்*

*வார்த்தையே பிரம்மம்"*

பொருள்: இயேசுவே கடவுள்

*"ப்ரம்ம வித் ப்ரம்னமவ பவதி "*

பிரம்மத்தை உணர்பவன் பிரம்மாவாக ஆகிறான்.
இதன் பொருள்: இயேசுவை அறிகிறவன் கர்த்தரை நாடுகிறான்.

"ஓம் ஸ ஹ நாவவது ஸஹ நௌ புனக்து
ஸஹ வீரியம் கரவாகனஹ
தேஜஸ்வ் நாவத்த மஸ்து
மா வித் விவனஹ"

இதன் பொருள் எல்லாம் வல்ல கடவுள் நம் அனைவரையும் ஒன்றாகக் காப்பாராக. ஒன்றாக உணவளிப்பாராக. நாம் ஒன்று சேர்ந்து கடவுளின் ஞானத்தை அடைய முயற்சிப்போம் நாமடையும் ஞானம் அன்பும் சந்தோஷமும் ததும்புவதாக இருக்கட்டும். ஒருவரையொருவர் அன்பு செய்வோம் ஆன்மாவிலும் பக்தியிலும் வாழ்க்கையில் எல்லா கட்டங்களிலும் சமாதானத்தோடு வாழ்வோமாக.

**உபநிஷந்:**

அஸத் தோமா ஸத் கமய - பொய்மையில் இருந்து மெய்மைக்கும்
தமஸோமா ஜ்யோதிர் கமய - இருளில் இருந்து வெளிச்சத்திற்கும்
ம்ருத்யோமா அம்ருதம் கமய - மரணத்தில் இருந்து நித்தியத்திற்கும் என்னை வழி நடத்தும்

ஓம் ஸ்ர்வேஷாம் ஸ்வஸ்திர் பவது - அனைவருக்கும் நலம் உண்டாவதாக
ஓம் ஸ்ர்வேஷாம் சாந்திர் பவது - அனைவருக்கும் அமைதியான மனதை தருக
ஓம் ஸ்ர்வேஷாம் பூர்ணம் பவது - அனைவருக்கும் நிறைவான வாழ்வு தருக
ஓம் ஸ்ர்வேஷாம் மங்கள் பவது - அனைவருக்கும் மங்களம் உண்டாவதாக.

**திருவாசகம் - மாணிக்கவாசகர்:**

பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி - பஞ்ச பூதங்களின் வடிவாய் காட்சி தருபவரே
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி - தண்ணீர் - நான்கு சுவை, காத்தல், அழித்தல், குளிர்தல்
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி - தீ - ஒளி, சுடுதல், அழித்தல்
வளியிடை இரண்டாம் மகிழ்ந்தாய் போற்றி - காற்று - குளிர்தல், காய்தல்
வெளியிடை ஒன்றாய் வினைத்தாய் போற்றி - ஆகாயம் - ரகசியம் ஒன்றைத் தன்மையை உள்ளடக்கியவரே வணக்கம்.

## வார்த்தை:

வார்த்தை என்பது எல்லா எழுத்திற்கும் வேதங்களுக்கும் முதலான சொல். இதை வேதாகமத்திலே "ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது அந்த வார்த்தை தேவனாயிருந்தது ------ அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்" என்று யோவான் 1:1, 14 வசனத்தில் நாம் வாசிக்கின்றோம். வார்த்தை என்பதை பிரணவம் என்று கூறப்படுகிறது. இதன் பொருளை ஆராய்ந்து உட்கொண்டால் முக்தி அடையலாம். தேவன் வார்த்தையாயிருந்து வார்த்தை மாம்சமாகப் பிறந்து குரு உபதேசம் செய்து மனுக்குலத்திற்கு வழிகாட்டியாக இருந்து மீட்பைத் தந்தார்.

வார்த்தையைப் பற்றி மண்டுக்ய உபநிஷத்திலும், கதோ உபநிஷத்திலும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அதை நாம் இங்கே காணலாம்.

"ஓமித்யேததக்ஸரமிதம் சர்வம்
தஸ்யோபவ்யாக்யானம் பூதம் பவத்பவிஸ்யதிதி
ஸர்வம் ஓம்கார ஏவா
யச்சானநயத்ரி காலாட்டிதம் ததனபயோம் கார ஏவ
சர்வம் றை எதத் ப்ரஹ்மாயமாத்மா ப்ரஹ்ம ஸோயமாத்மா"

ஓமித்யேத என்ற சொல்லின் பொருள் என்றுமே அழியாத "வார்த்தை" (Eternal Word) இந்த வார்த்தை தான் பிரஜாபதி. எல்லோராலும் போற்றப்படுகிற வணக்கத்திற்குரிய வார்த்தை. எல்லா வேதங்களும் வார்த்தையைப் பற்றி போதிக்கின்றன, பாதுகாக்கின்றன. மேலும் வார்த்தையை பிரணவம் என்று குறிப்பிடுகின்றன. பிரணவ மந்த்ரம் என்றும் கூறுகின்றன. எது திரும்பத் திரும்பச் சொல்லப்படுகிறதோ அதுவே மந்திரமாகிறது. ஆகவே வேதாகமத்தில் உள்ள எல்லா சொற்களுமே நம்மை மீட்கும் மந்திரம் தான்.

ஓம் என்பதை ஆங்கிலத்தில் **AUM** என்று குறிப்பிடுகிறார்கள்.

**A = Anointed** = அபிஷேகம் பண்ணப்பட்டவர்
**U = Ubiquitous** = எங்கும் நிறைந்தவர்
**M = Messiah** = உலகைக் காக்க வந்த மீட்பர்

இவர் யார்? மனுக்குலத்தைப் பாவத்திலிருந்து மீட்கத் தன்னைத்தானே பலியாக்கிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே.

பகவத் கீதையில் **"ஓம்"** என்ற வார்த்தையைப் பற்றிய ஸ்லோகம்

"ஓம் இதி ஏகாக்ஸரம் பிரம்ம
வ்யா ஹரன் மாம் அநுஸ்மரன்
யஹ ப்ரயாதி த்யஜன் தேகம் ஸ
யாதி பரமாம் கதிம்"

இதன் பொருள் யாதெனில் யாரெல்லாம் "ஓம்" அதாவது பிரம்மன் என்ற சொல்லைச் சொல்லி வருகிறார்களோ அவர்கள் மறுமையில் உன்னதமானவருடைய இடத்திற்குச் செல்லுகிறார்கள். இது வார்த்தையாகிய இயேசு கிறிஸ்துவின் தெய்வத்தன்மையை தெளிவுபடுத்துகிறது.

**வார்த்தையை ஆரியர்கள்/ பிராமணர்கள் ஓதி அர்ச்சனை செய்யும் ஸ்துதி ஸ்தோத்திரம் செய்யும் முறைகள்:**

**பிதா:**

ஓம் ஸ்ரீ மஹா தேவாய நமஹ
எல்லா தேவர்களுக்கும் பெரியவனே ஸ்தோத்திரிக்கிறேன்
ஓம் ஸ்ரீ காலகாலாய நமஹ
காலங்களுக்கு அப்பாற்பட்டவனே ஸ்தோத்திரிக்கிறேன்
ஓம் ஸ்ரீ விஸ்வநாதாய நமஹ
அனைத்திற்கும் தலைவனே ஸ்தோத்திரிக்கிறேன்
ஓம் ஸ்ரீ மஹேஸ்வராய நமஹ
சர்வ வல்லமையுடையவனே ஸ்தோத்திரிக்கிறேன்
ஓம் ஸ்ரீ ஸர்வேஸ் வராய நமஹ
எல்லோருக்கும் தேவனே ஸ்தோத்திரிக்கிறேன்
ஓம் ஸ்ரீ ருத்ராய நமஹ
சகலத்தையும் அழிக்கும் வல்லமையுள்ளவனே ஸ்தோத்திரிக்கிறேன்

**குமாரன்:**

ஓம் ஸ்ரீ பிரம்ம புத்ராய நமஹ
தேவனுடைய குமாரனே ஸ்தோத்திரிக்கிறேன்

ஓம் ஸ்ரீ ஏக புத்ராய நமஹ
ஒரே பேறான குமாரனே ஸ்தோத்திரிக்கிறேன்

ஓம் ஸ்ரீ கன்னி சுத்தாய நமஹ
கன்னியிடத்தில் பிறந்தவனே ஸ்தோத்திரிக்கிறேன்

ஓம் ஸ்ரீ உத்தாய நமஹ
பரிசுத்தாவியினால் பிறந்தவனே ஸ்தோத்திரிக்கிறேன்

ஓம் ஸ்ரீ தாரித்ரிய நாராயண நமஹ
ஏழை மனிதனாகப் பிறந்தவனே ஸ்தோத்திரிக்கிறேன்

ஓம் ஸ்ரீ ஸிபிலிஸ்டாய நமஹ
விருத்தசேதனம் பெற்றவனே ஸ்தோத்திரிக்கிறேன்

ஓம் ஸ்ரீ நித்ய பிரம்மச்சாரியாய நமஹ
மண வாழ்க்கை அற்றவனே ஸ்தோத்திரிக்கிறேன்

ஓம் ஸ்ரீ விருக்ஷ்சூல அருதாய நமஹ
சூலம் போன்ற மரத்தில் மரித்தவனே ஸ்தோத்திரிக்கிறேன்

ஓம் ஸ்ரீ பஞ்ச காயாய நமஹ
ஐந்து காயங்களை உடையவனே ஸ்தோத்திரிக்கிறேன்

ஓம் ஸ்ரீ ம்ருதம் ஜெயாய நமஹ
மரணத்தை வென்றவனே ஸ்தோத்திரிக்கிறேன்

ஓம் ஸ்ரீ தியாகேசாய நமஹ
மனுக்குலத்தின் பாவம் தீர்க்க தன்னைத் தியாகம் செய்தவனே ஸ்தோத்திரிக்கிறேன்

ஓம் ஸ்ரீ தெசஷ்ணாமூர்த்திய நமஹ
வலது பாரிசத்தில் இருப்பவனே ஸ்தோத்திரிக்கிறேன்

ஓம் ஸ்ரீ பசுபதேய நமஹ
ஆத்ம மணாளனே ஸ்தோத்திரிக்கிறேன்

ஓம் ஸ்ரீ சிவாய நமஹ
அன்பானவனே ஸ்தோத்திரிக்கிறேன்

ஓம் ஸ்ரீ சதா சிவாய நமஹ
எப்போதும் அன்புடையவனே ஸ்தோத்திரிக்கிறேன்

ஓம் ஸ்ரீ நாராயண நமஸ்துதே
மனிதனாகப் பிறந்தவனையே ஸ்தோத்திரிப்போம்

**பரிசுத்த ஆவி:**

ஓம் ஸ்ரீ பவித்ர தேவாய நமஹ
பரிசுத்த ஆவியானவரை ஸ்தோத்திரிக்கிறேன்

தமிழ்நூலான திருவாசகத்திலே **வார்த்தை** மிகவும் போற்றப்படுகிறது. அதை இங்கே பார்க்கலாம்.

பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாம் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் வினைந்தாய் போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி
தெரிவரிது ஆகிய தெயிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆனா னவர்கட்கு அன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி

பேராயிரமுடைய பொம்மான் போற்றி

மந்திர மாமலை மேயாய் போற்றி

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, அன்பின் வடிவமாய் ஏசுபெருமானே வார்த்தை உலகின் இரட்சகர், குரு, நண்பன், தாய், தகப்பன், பரிகாரி, மேய்ப்பன் இவரையல்லாமல் வேதங்கள் வேருயாரையும் காட்டவில்லை.

| | | |
|---|---|---|
| இயேசு ஒளி | வார்த்தை | பலி |
| (ஜோதி | பிரணவம் | யக்ஞம்) |

**தாலி கட்டும் மந்திரத்தின் பொருள் :**

"மாங்கல்யம் தந்துனானே
மமஜீவன ஹேதுநா
கண்டே பத்நாமி ஸுபகே
த்வம ஜீவ சரதஸ்சதம்."

இதன் பொருள் மங்கலமான பெண்னே, உன்னோடு இன்று நான் துவங்கும் இல்லற வாழ்வு நல்ல முறையில் இருக்க வேண்டும் என்று உறுதியளித்து. இந்த திருமாங்கல்யத்தை உன் கழுத்தில் அணிவிக்கிறேன். என் இல்லத் துணைவியாக, என் சுகதுக்கங்களில் பங்கேற்று, நிறைந்த யோகத்துடன் நீ நூறாண்டு காலம் வாழ்வாயாக.

**காயத்ரி மந்திரம் :**

"ஓம் பூர்புவஸ்ஸுவ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ நஹ் ப்ரசோதயாத்"

இதன் பொருள் எல்லா பாவங்களையும், அறியாமையையும் போக்குகிறவரும், வணங்குவதற்குரியவரும், இவ்வுலகத்தைப் படைத்த கடவுளையும் அவரது புகழையும் தியானிப்போமாக. அவர் நம் புத்தியை வழிநடத்துவாராக என்பதே ஆகும்.

"ஏகம் சத் விப்ரஹ் பஹுதா வதந்தி"

ஏசாயா 9: 6 - அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்தியபிதா, சமாதானபிரபு.

திருவிருத்தம் 1ம் கவியில்:

**கடவுள் யார்?**

"ஆதிமத்யாந்த ரசித நிஷ்களங்க
அநாதியங் கடவுளே, போற்றி
சோதியாய் அகண்டாகாரமாய் விளங்கும்
தூய சைதன்யமே, போற்றி
பேதியா நிலை நின்றுவரெலாம் தந்த
பிராணவ தெய்வமே, போற்றி
நீதியோடிரக்க சமரச நெறியை
நிறுவிய நமலனே, போற்றி"

இதன் பொருள் ஆதியும், நடுவும் அந்தமுமில்லாதவரே, மாசற்றவரே நித்திய கடவுளே தோத்திரம் சோதியாயும், பூரணமாயுமிருக்கிற பரிசுத்த ஞான ரூபனே தோத்திரம். ஓர் பேதமுமில்லாது நிலையாயிருந்து உலகத்தைப் படைத்த மூலகாரண கர்த்தாவே தோத்திரம். நீதி, இரக்கம் என்னும் இரண்டுக்கும் முரண்பாடில்லாத சமாதான வழியை ஏற்படுத்திய பரிசுத்தனே ஸ்தோத்திரம்.

**தொகுத்து எழுதியவர்**
திரு.செல்வின் ஜெயராஜ்
பேராயர் அலுவலகம்
பாளையங்கோட்டை